# மணிமேகலைக் காப்பியத்தில் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின், தமிழ்த்துறைத் தலைவர், ஜெ.அ.மகளிர் கல்லூரி, பெரியகுளம்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகத் திகழ்கிறது. போதுவாக மனிதன் ஒருவன்தான் வாழ்க்கை இலட்சியத்தோடு போராடுகின்றான். பிறரோடு மனங்கலந்து பேசி, அன்போடு உறவாடி வாழ்வது மனித குலத்தின் உயர்ந்த இலட்சியமாகத் திகழ்கிறது. அப்படிப்பட்ட உயர்ந்த இலட்சியத்தை மற்றும் வாழ்க்கை நெறிகளை மணிமேகலைக் காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது. மணிமேகலைக் காப்பியம் மனிதனுக்குத் தேவையான அறக்கருத்துக்கள், மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ,நிலையாமை, கற்பு நிலை மற்றும் மக்கள் வாழ்வில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகள், பகையை நீக்குதல் எண்வகை ஒழுக்கம் போன்ற வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்புகிறது. அவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

**அறக்கருத்துக்கள்:-**

மனிதனின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் சான்றோர் பெருமக்கள் வகுத்துக் கொடுத்த வாழ்க்கை நெறியே அறம் எனப்படுகிறது. பிறருக்காக வாழும்வாழ்க்கையை சாத்தனார் தலையாய அறமாகக் கருதுகிறார். மணிமேகலைக் காப்பியம்அறத்தை வலியுறுத்திக் கூறக்கூடியக் காப்பியமாகும். மனிதனை நல்வழிப்படுத்துவது அறம். மனிதப் பண்புகள் உயர்வாய் விளங்க, நேயம் நிலைக்கக் கல்வியும் உணவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சுவர் நன்றாய் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். உடல் நலமாய் இருந்தால் தான் வாழ்க்கையில் விரும்பியவற்றைச் சாதிக்க முடியும். அதற்கு முக்கியத் தேவை வயிற்றுக்கு உணவு. அந்த உணவைக் கொடுப்பவர் உயிர் கொடுப்பவர் ஆவார். அது மட்டுமல்ல செவிக்கும் உணவு தேவை. அது மனநலனைக் காக்கவல்லது. நல்ல செய்திகள், இனிய இசை, அறிவிற்கு விருந்தான பேச்சுகள் போன்றவை செவிப்புலன் மூலம் உடல் நலத்தைக் காக்கின்றன. மணிமேகலைக் காப்பியம் வயிற்றுக்கும் செவிக்கும் உணவு கொடுக்கிறது. உண்மையான அறம் யாதெனில் தம் பசியை ஆற்றுவித்துக் கொள்வதற்குரிய பொருளின்றி, வசதியின்றி வறுமையில் வாடும் ஏழை மக்களின் பசியினைத் தீர்ப்பது ஒரு சிறந்த அறமாகும்.

**"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவா ராற்றலின் பின்"1**

என்று குறள் கூறுகிறது. பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பதே சிறந்த அறம் என்று பண்டைய நூல்கள் வலியுறுத்துகின்றன. புறநானூற்றில் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற வரியைக் காணலாம். இதனை மணிமேகலையில்

**" ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"** பா.பெ.கா., 93 - 96

என்ற வரிகள் எடுத்துணர்த்துகின்றன. இவ்வுலகில் வாழும் மக்களுக்கு உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தவராவர் என உணவளித்தலின் சிறப்பினை மணிமேகலை கூறுகிறது.

**விருந்தோம்பல்:-**

விருந்து பற்றி தொல்காப்பியர்

**" விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்."2**

என்கிறார். பெண்ணின் சிறப்புகளுள் விருந்தோம்பல் மிகவும் முக்கியமானது. சுற்றத்தினரை உபசரித்து உணவு படைத்தலும் மற்றும் புதியவர்களை உபசரித்து உணவு படைத்தலும்



Scanned by CamScanner

பெண்களின் மாண்பு என்கிறார் தொல்காப்பியர். இத்தகைய விருந்தோம்பல் சிறப்பு மணிமேகலையிடம் காணப்படுகிறது. விருந்தோம்பும் சிறப்பை.

"......................தாயர் தம்முடன்
_______________________________
சென்று அவர் தம்மைத் திருவடி வணங்கி
நன்று என விரும்பி நல்லடி கழுவி
ஆசனத் தேற்றி அறுசுவை நால்வகைப்
போனகம் ஏந்திப் பொழுதினிற் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து
வாய்வதாக வென்மனப் பாட்டறம் என
மாயை விட்டிறைஞ்சினள் மணிமேகலை." க.மா.பு.கா. 235 - 245.

என்று இக்காப்பியம் குறிப்பிடுகிறது மணிமேகலை அறவண அடிகளின் திருவடிகளை வணங்கி, நீரால் கழுவி பின் அவர்களை ஆசனங்களிலே அமர்த்தினாள். அறுசுவையோடும் கூடிய நால்வகை உணவு வகைகளையும் ஏந்திச் சென்று உண்பதற்கு உரியதான காலமும் வர அவர்களை உண்ணச் செய்தாள். உண்ட பின்னர் வெற்றிலையையும், பாக்கும், கற்பூரமும் படைத்து உபசரித்தாள். இவ்வாறு விருந்தோம்பும் பண்பை மணிமேகலை வெளிப்படுத்தினாள்..

**ஐவகைச் சீலங்கள்:-**

" கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ள களவும் என்று உரவோர் துறந்தவை"ஆ.நா.அ.கா. 77 - 78

என மணிமேகலை கூறுகிறது. கள்ளுண்ணாமை,பொய் பேசாமை, காமம் கொள்ளாமை, கொலை செய்யாமை, உள்ளத்தில் களவு செய்ய எண்ணாமை ஆகிய இவ்வைந்தையும் பஞ்சசீலம் என்கிறது மணிமேகலை.

**கள்ளுண்ணாமை:-**

கள்ளின் தீமை எப்படிப்பட்டது என்றால் மனிதனுடைய உணர்ச்சிகள் தூண்டப் பெற்று கோபத்தை மிகுதியும் வெளிப்படுத்தும். மது அருந்தாமை புத்த கொள்கையில் ஒன்று. இது மக்களின் அறிவை மயக்கும் தன்மை கொண்டது. சாதுவன் நாகர் குலத் தலைவனிடம் மயக்கும் கள்ளினை அறிவு தெளிந்த மக்கள் முற்றிலும் வெறுத்தனர். அதேபோல நாகர் மலைவாழ் மக்கள் அனைவரும் முற்றிலுமாக விட்டொழித்து நல்லறங்களைச் செய்து வாழ வேண்டும் என்று புத்த சமயக் கருத்தை அறிவுறுத்துகிறான்.

**பொய் பேசாமை:-**

பொய்யான வழியில் ஒழுகுவதை விட அறவார்த்தைகளினால் ஒழுகுவது நல்லது என்று மணிமேகலை கூறுகிறது. பொய்மையான சொற்களை மட்டும் விட்டு விட்டு நலம் தரும் வார்த்தைகளினால் பேசுவது நல்லது என்று மணிமேகலை தன்னிடம் வருபவர் அனைவரிடமும் பொய்யின் தீமையினை எடுத்துக் கூறுகிறாள்.

**காமம் கொள்ளாமை:-**

மனிதர்கள் ஒழுக்கத்தினின்று தவறுவதனால் தாம் அடையக் கூடாத பழியை அடைவர். இருமனங்களைக் கெடுப்பது காமமே. காம வெறியில் சிக்கிப் பரிதவிக்கும் நிலையை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. உதயகுமரன் மணிமேகலையின் மீது காமம் கொண்டிருக்கும் வேளையில் மணிமேகலாதெய்வம் தோன்றி உன் தீய விருப்பத்தை ஒழிப்பாயாக என்று கூறுகிறாள். உதயகுமரன் தந்தைக்கு முனிவர் ஒருவர் இந்நகரில் பலர் காமமாகிய கள்ளினால் போதை ஏற்பட்டு பத்தினிப் பெண்டிரை அணுகியும், நல்ல தவப் பெண்டிரின் மேல் உள்ளத்தைச் செலுத்தியும், தீவினை செய்து உயிர்விட்டனர் என்று எடுத்துரைக்கிறார்.

"முடிபொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்
கடியப் பட்டன ஐந்துஉள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம்" சி.செ.கா., 169 - 172

என்கிறார். கடியப்பட வேண்டிய கள், பொய், கொலை, களவு ஆகிய நான்கினையும் தன்பால் உடையது காமம் என்று காமத்தின் கொடுமையை விளக்குகிறார்.

**கொலை செய்யாமை:-**

உலகில் தலை சிறந்த அறம் கொல்லாமை. அதனை நீக்கினால் எல்லா நன்மையும் கிட்டும். பிற உயிரையும் தம் சொந்த உயிராகப் போற்ற வேண்டும் எனப் புத்த சமயம் போதிக்கின்றது. ஆவின் மகனான ஆபுத்திரன் தான் வளர்ந்த அந்தணர் பகுதியில் யாகத்திற்கென்று பலியிடுவதற்காக பசு ஒன்றைக் கட்டி வைத்திருக்க, அப்பசுவினை நள்ளிரவில் கவர்ந்து சென்று பசுவின் உயிரைக் காப்பாற்றினான். அப்போது அந்தணர்கள் ஆபுத்திரனை ஏளனம் செய்தனர். அதைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு உயிரின் உன்னத நிலையினைக் கூறினான்.



Scanned by CamScanner

**களவு செய்யாமை:-**

பிற மனிதரிடமிருந்து இழிவான சொற்களைப் பெறாமல் இருக்க வேண்டுமானால் பிறருடைய சிறிய பொருளாக இருந்தாலும் அதை இச்சிக்காது இருக்க வேண்டும். 'களவு' அல்லது 'திருட்டு' என்பது பிறருடைய பொருளை விரும்புதலே ஆகும். பிறருடைய பொருளை விரும்பக் கூடாது என்பதை புத்த சமயம் எடுத்துரைக்கிறது. களவினால் வரும் துன்பம் மிகப் பெரியது. இதனை,

> **"களவுஏர் வாழ்க்கையர் உறூஉம் கடுந்துயர்**
> **இளவேய்த் தோளாய்க்கு இதுஎன வேண்டா**
> **மன்பேர் உலகத்து வாழ்வோர்க்கு இங்கிவை**
> **துன்பம் தருவன துறத்தல் வேண்டும்" சி.வி.கா., 126 - 129**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. எனவே துன்பம் தரக்கூடிய அனைத்தையும் துறத்தல் வேண்டும் என மணிமேகலை கூறுகிறது.

**கற்பு நிலை:**

இலக்கியங்களில் பெண்ணுக்கு கற்பே அதிகம் வலியுறுத்தப்படுகிறது. "கற்பு என்னும் மதிப்பு காலங்காலமாக புராண இதிகாச காலம் முதல் இன்று வரை பெண்களின் வாழ்வில் சிறப்பாகத் தமிழக மகளிரின் வாழ்வுக்கு இலக்கணமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது" 4 என்று மு. கமலா குறிப்பிடுகிறார். மருதி என்ற பெண்மணி காவிரியாற்றில் நீராடி விட்டு தனியாக வந்து கொண்டிருந்தாள். அச்சமயத்தில் ககந்த மன்னனின் இளைய மகன் அவளுடன் வருவோர் யாரும் இல்லாமையால் அவ்வரசிளங்குமரன் அவளைப் பார்த்து மாதே! நீ என்னோடு வா என்றழைத்தான். அச்சொல் கேட்டு மருதி மிகவும் கலங்கி,

> **" மண்திணி ஞாலத்து மழைவளம் தருஉம்**
> **பெண்டிராயின் பிறர் நெஞ்சு புகாஅர்**
> **புக்கேன் பிறனுளம்; புரிநூல் மார்பன்**
> **முத்தீப் பேணும் முறையெனக்கு இல்லை" சி.செ.கா. 45 - 48**

என்று நினைத்து வீட்டிற்குச் செல்லாமல் அருகில் இருந்த பூதச் சதுக்கம் எனனும் கோயிலில் புகுந்து தாளிட்டுக் கொண்டாள். மிகவும் வேதனையோடு மருதி அழுது புலம்பினாள். நான் என்ன தவறு செய்தேன். என்னுடைய கணவனுக்கு நான் எந்தக் குற்றமும் செய்ததில்லை. பிறர் நெஞ்சு புகுந்த காரணம் தெரியவில்லை. தெய்வமே நீதான் எனக்கு உண்மையைக் கூற வேண்டும் என்று அழுது புலம்புகிறாள். இந்நகரை அரசாள்கின்ற ககந்தன் தன் மகனின் குற்றத்தை அறிந்து தண்டனை கொடுப்பான். ஏழு தினங்களுக்குள் அரசன் தண்டிப்பான். இல்லையென்றால் நான் தண்டிப்பேன் என்று அத்தெய்வம் கூறுகிறது. அதே போன்று அரசன் ஏழு தினங்களுக்குள் தன் மகனை வெட்டி வீழ்த்தினான். தவறு செய்பவர்களுக்கு உடனே தண்டனை வழங்க வேண்டும் என்பதையும், கற்பின் சிறப்பையும் மனதளவில் தீய எண்ணங்கள் நினைப்பதே பாவம் என்பதையும் இக்கிளைக்கதை சுட்டிக்காட்டுகிறது.

**முடிவுரை:**

இலக்கியம் மனிதனின் வாழ்க்கையை நெறிப்படுத்தி மனிதனை மாண்புடையவனாக மாற்றுவது. அவ்வாறு மனிதனை மாண்புடையவனாக மாற்றக் கூடிய சிறந்த இலக்கியமாகவும், அனைத்து உயர்ந்த கருத்துக்களையும் தன்னகத்தே அடக்கியுள்ள சிறந்த காப்பியமாகவும் மணிமேகலைக் காப்பியம் திகழ்கிறது. இக்காப்பியம் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல அறக்கருத்துக்களை எடுத்தியம்புகிறது. தீயவற்றை அகற்றி நல்ல நெறிகளைக் கடைபிடித்து மானுடம் சிறப்புற வாழ்ந்திட வழிகாட்டுவதாய் அமைகிறது. இக்காப்பியம் கள் உண்ணல், பொய் கூறுதல், கொலை செய்தல், காமவெறி, போன்ற செயல்கள் மனிதனிடம் இருந்தால் அவன் இழிவை நோக்கிச் செல்வான் என்று கூறி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இத்தீவினைகளை நீக்கி வாழ்பவன் ஒழுக்கமுடையவனாகக் கருதப்படுவான் என்று கூறுகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. திருவள்ளுவர் திருக்குறள் கு. 225.
2. தொல்காப்பியர், 'தொல்காப்பியம்' பொருள்., நுற்பா. 150.
3. திருவள்ளுவர் 'திருக்குறள்' கு. 734
4. மு. கமலா, 'மணிமேகலையில் பெண்கள்', ப.42.



Scanned by CamScanner